இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 23-08-2025

# அடக்குமுறையின் உச்சம்!

அடக்குமுறையின் உச்சம், இந்தச் சட்டம். சிலர் அடக்குமுறையை மறைமுகமாகச் செய்வார்கள். ஆனால் பா.ஜ.க. பட்டவர்த்தனமாகச் செய்யும்.

பிரதமர், ஒன்றிய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோர் கடுமையான குற்றங்களில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டால் அவர்களை உடனடியாக பதவி நீக்கம் செய்வதுதான் பா.ஜ.க. கொண்டு வந்துள்ள சட்டம் ஆகும். 30 நாட்கள் சிறையில் இருந்தால் 31 ஆவது நாள் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், அமைச்சர் அமித்ஷா முன்னால் மசோதாவைக் கிழித்தெறிந்த நிலையில், இதனை நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது பா.ஜ.க.

ஒருவர் தண்டனை பெற்றால் அவரது பதவி பறிபோய்விடும் என்று இதுவரை இருந்தது. 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யலாம். ஆனால் இன்றைய சட்டப்படி வழக்குப் பதிவு செய்து அதன் அடையாளமாகக் கைது செய்யப்பட்டாலே, 30 வது நாளில் பதவி பறிபோய்விடுமாம். 30 நாள் என்பது இரண்டு பதினைந்து நாட்கள். இரண்டு பதினைந்து சிறைக்காலம் கடந்தாலே பதவி போய்விடும். அதாவது இரண்டு முறை கைது நீட்டிப்பு செய்தாலே அவரது பதவி போய்விடும்.

**சட்டம் கொண்டு வந்தவர் பிரதமர். அதில் அவரைக் கைது செய்யப் போவது இல்லை. நடப்பது பா.ஜ.க. ஆட்சி. அதன் ஒன்றிய அமைச்சர்கள் இதில் சிக்கப் போவது இல்லை. மாநில முதலமைச்சர்களை, மாநில அமைச்சர்களைக் குறி வைத்து இதனைக் கொண்டு வருகிறார்கள். தங்களது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க இதனைப் பயன்படுத்தப் போகிறார்கள். அதற்காகவே இந்த ஆள்தூக்கிச் சட்டத்தை சர்வாதிகார பா.ஜ.க. அரசு கொண்டு வருகிறது.**

**குறைந்தபட்சம் ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றங்களில் கைது செய்யப்பட்டாலே இனி பதவி போய்விடும். பழிவாங்கும் எண்ணத்துடன் ஒருவர் மீது பொய் வழக்குப் போட்டு கைது செய்து, 30 நாள் சிறையில் இருந்தாலே போதும். பதவி போய்விடும்.**

**அதாவது நீதிமன்றத்திடம் இருந்த அதிகாரம், இப்போது காவல்துறை கையில் தரப்பட்டுள்ளது. விசாரணை தேவையில்லை. விவாதம் தேவையில்லை. தண்டனை தேவையில்லை. ஒரு எப்.ஐ.ஆர். போதும். இதை விட அநியாயம் இருக்க முடியுமா? ஒருவர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால்தான் தண்டனை தரப்படும். ஆனால் அமித்ஷா சட்டப்படி, ஒருவர் மீது எப்.ஐ.ஆர். போட்டு கைது செய்தாலே அவர் குற்றவாளி தான்.**

**இன்னொரு கேலிக்கூத்தான அறிவிப்பை தனது எக்ஸ் தளப் பதிவில் சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. "கைது செய்யப்பட்டவர் உடனடியாக ஜாமீன் பெற்று விட்டால் அவர் இழந்த பதவியை மீண்டும் பெற முடியும்" என்று சொல்லி இருக்கிறார். அப்படியானால் இவர்கள் குற்றத்தை பெரிதாக நினைக்கிறார்களா? அல்லது ஜாமீனை மதிக்கிறார்களா? ஒருவருக்கு ஜாமீன் கிடைப்பதுதான் அவர் பதவியைத் தொடர்வதற்கான அளவுகோலா? இது என்ன அபத்தம்?**

மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் தனது அரசியல் எதிரிகள் மீது பொய் வழக்குப் போட்டு மிரட்டவே பா.ஜ.க. இதனைக் கொண்டு வந்துள்ளது. "தங்களுக்குப் பிடிக்காத, அரசியலில் ஒத்துழைக்க மறுக்கும் அரசியல் தலைவர்களை இந்தச் சட்டத்தின் மூலம் வளைக்கலாம் என்று ஒன்றிய அரசு நினைக்கிறது. இந்த மசோதா சட்டமானால் யாரையும் கைது செய்து அவர்களின் பதவியைப் பறிக்கலாம் என்ற நிலை வந்துவிடும். ஜனநாயகத்தை ஒன்றிய அரசு படுகுழியில் தள்ளி உள்ளது" என்று எதிர்க்கட்சிகள் அனைவரும் நாடாளு மன்றத்தில் கடுமையாக எதிர்த்தார்கள்.

அரசமைப்புச் சட்டத்தின் 130 ஆவது திருத்தமாக இது கொண்டு வரப்பட்டுள்ளது. கடுமையான குற்றங்களில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்படுபவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்காக அரசமைப்பு சட்டப் பிரிவுகள் 75, 164, 239 ஏஏ ஆகியவற்றில் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இதே பிரிவுகள் ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்திலும் திருத்தப்படுகிறது. இதே பிரிவுகள் யூனியன் பிரதேச அரசு சட்டங்களிலும் திருத்தப்படுகிறது.

ஏதோ காலம் காலமாக தாங்களே ஆட்சியில் இருக்கப் போவதாக நினைத்து பா.ஜ.க. துரைமார்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் தயாரித்த அடக்குமுறை வலையில் அவர்களே நாளைக்கு சிக்கித்தான் போவார்கள்.

"இது ஒரு கருப்பு நாள்" என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொல்லி இருக்கிறார். இதனை விடக் கருப்புச் சட்டம் இருக்க முடியாது. வாக்குத் திருட்டில் மாட்டிக் கொண்ட பா.ஜ.க., அதனை திசை திருப்பவும், வாக்குத் திருட்டை கண்டுபிடித்த ஜனநாயக சக்திகளை மிரட்டவும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

சந்தேகத்தையே சட்டம் ஆக்க நினைக்கிறார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டரை நீதிபதி ஆக்க நினைக்கிறார்கள். காவல் நிலையங்களை, நீதி மன்றங்களாக ஆக்க நினைக்கிறார்கள். நீதித்துறையின் அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைக்கிறார்கள். மன்னராட்சிக் காலத்துக்குத் திரும்ப நினைக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் பதவிகளை ஒரு எப்.ஐ.ஆர். மூலமாக பறிக்க நினைக்கிறார்கள். மொத்தத்தில் தாங்கள் நினைப்பதே சட்டம் என்பதை நிரூபிக்கவே இது கொண்டு வரப்பட்டது.

**தேர்தல் முறை மூலமாக எதிர்கொள்ள நினைக்காமல் தங்கள் கைவசம் இருக்கும் புலனாய்வு அமைப்பு மூலமாக இதனைச் செய்வது பா.ஜ.க.வின் கோழைத்தனம் ஆகும்.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், ராயபுரம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை சந்தித்து பேசினார்.






முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.8.2025) சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் ரகுமான் கான் அவர்கள் எழுதிய நியாயங்களின் பயணம். மௌனமாய் உறங்கும் பனித்துளிகள், உலகமறியா தாஜ்மஹால்கள். பூக்கும் இலையுதிர் காலம், வானம் பார்க்காத நட்சத்திரங்கள் மற்றும் சட்டமன்ற பேருரைகள் அடங்கிய இடி முழக்கம் ஆகிய நூல்களை வெளியிட இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீதியரசர்கள், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் பாக்டர் சுபேர்கான், ரியாஸ்கான் உள்ளிட்ட குடும்பத்தினர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், புத்தக பதிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ரூ.3 முதல் 6 இலட்சம் வரை மானியம்; பட்டதாரி இளைஞர்கள் சுயதொழில் தொடங்கிட

# 1000 உழவர் நல சேவை மையங்கள் அமைப்பு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

சென்னை, ஆக. 23-

1000 உழவர் நல சேவை மையங்கள் அமைத்திட 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை மானியம் பெற்று சுயதொழில் துவங்க வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களுக்கு அரிய வாய்ப்பு-வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்தி கொள்ளுமாறு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

மே 2021-ல் இவ்வரசு பொறுப் பேற்றவுடன் வேளாண்மைத்துறை என்று இருந்ததை உழவர்களின் நலன்காக்கும் பொருட்டு வேளாண்மை-உழவர் நலத்துறை என்று பெயர் மாற்றம் செய்ததோடு, பல்வேறு உழவர்களின் நலன் காக்கும் முத்தாய்ப்பான திட்டங்களின் ஒன்றான வேளாண் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பை முடித்த இளைஞர்களின் படிப்பறிவும், தொழில்நுட்பத்திறனும் உழவர் பெருமக்களுக்கு உதவியாக இருந்து வேளாண் உற்பத்தியினை உயர்த்திடும் வகையில் 1,000 முதலமைச்சரின் உழவர் நல



சேவை மையங்கள் அமைக்கப்படும் என்று 2025-26ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததை நிறைவேற்றும் வகையில் 42 கோடி ரூபாய் மாநில நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், ரூபாய் 10 இலட்சம் முதல் ரூபாய் 20 இலட்சம் வரையிலான மதிப்பில் உழவர்நல சேவை மையங்கள் அமைத்திட 30 சதவீத மானியமாக 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இம்மையங்களில் உழவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும். பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய் மேலாண்மைக்குத் தேவையான ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன் நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும்; முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் மூலம் விவசாயிகள் ஒரே இடத்தில் அனைத்து சேவைகளையும் பெற உதவுவது மட்டுமல்லாமல், வேலையில்லாத வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் சுயதொழில் செய்வதற்கும் வாய்ப்பும் ஏற்படுத்தப் படுகிறது.

இத்திட்டத்தில் இணையும் பயனாளிகள் உழவர்நல சேவை மையங்களை சிறப்பாக நடத்தும் வகையில் வேளாண்மை - உழவர் நலத் துறையில் வழங்கப்படும் அனைத்து உரிமங்களும் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையப் பயனாளிகளுக்கும் வழங்கப்படும். இத்திட்டத்தில் இணையும் பயனாளிகளின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் வகையில் அந்தந்த மாவட்டத்தில் உள்ள உழவர் பயிற்சி நிலையம் / வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிற்சியும் அளிக்கப் படும்.

எனவே, இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் 20 முதல் 45 வயதுக்குட்பட்ட வேளாண் சார்ந்த பட்டப் படிப்பு/பட்டயப்படிப்பு முடித்த நபர்கள் உரிய வங்கியில் விரிவான திட்ட அறிக்கையுடன் கடன் பெற விண்ணப்பிக்க வேண்டும். வங்கி நடைமுறைகளைப் பின்பற்றி கடன் ஒப்புதல் பெறப்பட்டபின், இத்திட்டத்தில் மானிய உதவி பெற AGRISNET HTTPS://WWW.TNAGRISNET.TN.GOV.IN/KAVIADP/REGISTER என்ற இணையதள முகவரியில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அரசின் உதவியுடன் துவங்கப்படும் சுயதொழில் என்பதால் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு வேளாண் பட்டதாரிகள் / பட்டயதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### குலசேகரப்பட்டினம்

# விண்வெளி ஏவுதளம் எப்போது செயல்படத் தொடங்கும்?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 23-

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவு தளம் குறித்த முக்கிய கேள்விகளை தூத்துக்குடி மக்களவை உறுப்பினரும், திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆகஸ்டு 20 ஆம் தேதி எழுப்பினார்.

அவர் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

"குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவுதளத்தினுடைய உள்கட்டமைப்பு மேம்பாட்டின் தற்போதைய நிலை என்ன? இந்த விண்வெளி ஏவுதளம் முழுமையாக செயல்பாட்டுக்கு வருவதற்கான கால நிர்ணயம் என்ன? இந்தத் திட்டத்திற்காக இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப் பட்ட நிதி எவ்வளவு?

விண்கலம், செயற்கைக்கோள் அல்லது ஏவுதள வாகனத்தின் சுமந்து செல்லும் திறன் (சரக்கு அல்லது உபகரணங்களைக் குறிக்கும்) PAY LOAD மற்றும் ஏவுதள வசதி ஆகிய அம்சங்களில் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையத்துடன் ஒப்பிடும்போது குலசேகரப்பட்டி னம் ஏவுதளத்தின் சிறப்பு என்ன?



குலசேகரப்பட்டினம் ஏவு தளத்தில் இருந்து அடுத்து ஏவப்பட இருக்கிற ராக்கெட் உள்ளிட்ட விண்வெளித் பயணத் திட்ட விவரங்கள் என்ன?" என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில்,

"குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவு தளத்தின் உள்கட்டமைப்பைப் பொறுத்தவரை, கிழக்கு-கடற்கரை சாலைக்கு மாற்றுப் பாதையாக கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் தவிர மற்ற நில கையகப்படுத்துதல் பணிகள் பூர்த்தியாகி விட்டன.

ஏவு தள மேம்பாட்டுப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கட்டுமானப் பணிகள் தொடங்கிவிட்டன.

பல்வேறு உபகரணங்கள் உற்பத்தி, கட்டமைப்புப் பணிகள் வெவ்வேறு மையங்களில் நடந்துகொண்டிக்கின்றன.

குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவுதளத்தை 2026-27 நிதியாண்டில் முழுமையாக இயக்கத் தொடங்குவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவுதளத்துக்காக மொத்தம் 985.96 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்த நிதியில் 2025 ஜூலை 31 ஆம் தேதி நிலவரப்படி 389.58 கோடி ரூபாய் பயன்படுத்தப் பட்டுள்ளது.

குலசேகரப்பட்டினம் ஏவுதளத்தை ஸ்ரீஹரிகோட்டாவில் இருக்கும் சதீஷ் தவான் விண்வெளி ஏவுதளத்துடன் ஒப்பிட்டால்...

ISRO வின் சிறிய செயற்கைக் கோள் ஏவுதள வாகனமான 'SSLV' செயற்கைக்கோள் ஏவுதள வாகனங்களின் சுமந்து செல்லும் திறனை மேம்படுத்தும். அதே நேரத்தில் துருவ சுற்றுப்பாதைகளுக்கு செயற்கைக் கோள்களை ஏவிட குலசேகரப் பட்டினம் ஏவுதளம் உதவியாக இருக்கும்.

மேலும் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து செயல்பாட்டு ரீதியான விதிவிலக்கான, சூரியனுடன் ஒத்திசைவில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட வகையான துருவ சுற்றுப்பாதையில் செலுத்தப்படும்போது... நிலப்பகுதி களில் செலவழிக்கப்படும் நிலை களின் தாக்கத்தால், ராக்கெட் திசை மாறும் விகிதத்திலும் நிலைப்புத் தன்மையிலும் மாற்றம் ஏற்படுகிறது. இதனால் ராக்கெட்டின் சுமை தாங்கும் திறன் (PAYLOAD) கணிசமாகக் குறைகிறது.

குலசேகரப்பட்டினத்திலிருந்து ஏவப்படும் போது SSLV-யின் சுமை தாங்கும் திறன் சுமார் 300 கிலோ ஆகும். அதேசமயம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படும்போது சுமை தாங்கு திறன் போதுமானதாக இல்லை.

குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவுதளம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு, அரசு சாரா நிறுவனங்களிலிருந்து SSLV மற்றும் அதற்கு சமமான நிலையிலான Small Satellite Launch Vehicle சிறிய செயற்கைக் கோள்களை ஏவும் விண்கலங்களை ஏவ திட்டமிடப்பட்டுள்ளது"

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.